தாய் சேய் நல விடுதி

*4827 திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா:

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஒன்றியம் அரசம்பட்டியில் தாய் சேய் நல விடுதி கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லவே இல்லை என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''இல்லை'' என்றுதான் சொன்னார். அடுத்து கேட்டவுடன் இல்லவே இல்லை என்று உறுதியாகச் சொல்வார். (சிரிப்பு)

திரு. ஆர். சிங்காரம்: சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் வேறு தாய் சேய் நலவிடுதி கிடையாது. ஏழைத்தாய்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். தாய்களைக் காப்பாற்றுகின்ற இந்த அரசு........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன தாயுள்ளம் உங்களுக்கு! (சிரிப்பு)

திரு. ஆர். சிங்காரம்: தாய் சேய் நலவிடுதி அமைக்க மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; பேரவைத் தலைவர் அவர்களே, இலங்காபுரியில் இயங்கும் துணை சுகாதார நிலையம், அவர் குறிப்பிடுகின்ற தாய்களையும் கவனித்துக்கொள்ளும் நிலையில் இருக்கிறது. மேலும் தமிழகத்தில் உள்ள தாய்களை எல்லாம் கவனிக்க வேண்டிய பொறுப்பு டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் இருக்கிற இந்த அரசுக்கு இருக்கிற காரணத்தால், அனைத்தையும்-மக்கள் தொகை, தூரம் போன்றவைகளைக் கவனத்தில் கொண்டு திட்டங்கள் தீட்டப்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

10-05 மணி

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள தாய்களை எல்லாம் இந்த அரசு கவனிக்கும் என்று சொன்னார்கள். ஆனால் தமிழகத்திலுள்ள தாய்-சேய் நலவிடுதிகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் அங்கே

1990 ஏப்ரல் 18]

இருக்கிற தாய்களும், சேய்களும் பல்வேறான கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டிலே வருகின்ற புகார்கள் எல்லாமே உங்களுக்குத்தான் வரும்போல் தெரிகிறது. (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற புகார்கள் அரசுக்கு எதுவும் வரவில்லை. அது என்னமோ தெரியவில்லை. பெரும்பாலான புகார்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மட்டுமே வருகின்றன. (சிரிப்பு) ஒருவேளை புகார்களுக்குக் காரணமாக அவரே இருப்பாரோ என்ற சந்தேகம் கூட ஏற்படுகிறது. (சிரிப்பு) சுட்டிக்காட்டினால் எந்த இடத்திலே புகார் இருந்தாலும் நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவக் கல்லூரி

*3391 திரு. ஜி.ஜி. குருமூர்த்தி :

மாண்புமிகு கால்நடை பாராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெரியார் மாவட்டம், காங்கேயம், மொடக்குறிச்சி கொடுமுடி, பவானி ஆகிய பகுதிகளில் ஏதேனும் ஓர் இடத்தில் கால்நடைக் மருத்துவக்கல்லூரி அமைத்திடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஜி.ஜி. குருமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே காங்கேயம் என்று சொன்னாலே, கால்நடைகளில் சிறந்த ஒரு இனம் உற்பத்தியாகின்ற இடம் அது என்பது தெரியும். அதேபோல் பெரியார் மாவட்டம்,பர்கூர் இனம் என்று சொல்லப்படுகின்ற ஒரு சிறந்த கால்நடை இனமும் இருக்கக்கூடிய மாவட்டமாகும். எனவே, அங்கே, அந்த மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கான முயற்சிகளை மீண்டும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் இனத்தை அழியாமல் காப்பாற்றுவதற்கு அரசின் மூலமாக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. அதற்காக ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,